
# சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்

சித்தி றபீக்கா பாயிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்

சித்தி றபீக்கா பாயிஸ்

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூலின் பெயர் | - சதுப்பு நிலக் கொக்கின் கால்கள். |
| வகை | - கவிதைகள் |
| நூலாசிரியர் | - சித்தி றபீக்கா |
| முகவரி | - 166, வைத்தியசாலை வீதி,<br>சம்மாந்துறை - இலங்கை<br>077-9039509 |
| நூல் உரிமை | - நூல் ஆசிரியருக்கு |
| பதிப்பு | - முதலாவது பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | - 2019 |
| வெளியீட்டு ஆண்டு | - 2020 |
| வெளியீடு | - பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கிழக்கு மாகாணம். |
| அட்டை வடிவமைப்பு | - ஜனாப். ஆதம்பாவா பாயீஸ் |
| கணனி | - திருமதி. ஜெயரதி ரவிச்சந்திரன்,<br>ஜனாப். பௌசியா ஜ.்.பர் |
| அச்சகம் | - சிறீராம் அச்சகம்<br>(ரிங்கோ பிரிண்டர்ஸ்)<br>158, தபால் நிலைய வீதி,<br>திருகோணமலை.<br>trincoprint.2016@gmail.com<br>0262228677, 0777262225<br>F.b:Trinco Printers |
| பக்கங்கள் | - 64 |
| பிரதிகள் | - 300 |
| ISBN | - 978-955-4628-69-4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

நேசமிகு பெற்றோர்
பாசமிகு துணைவர்
செழுமைமிகு செல்வங்கள்
வளமிகு ஆசான்கள்
ஆற்றல்மிகு படைப்புலகம்
என்போர் அனைவருக்கும் என்மனப் பூக்கள்
சொரிந்து சமர்ப்பணம் செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறந்த எழுத்தாளராகும் பாக்கியம் கிட்டட்டும்...

#### கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாண கலாசார திணைக்களமானது கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ், சிங்கள முஸ்லிம் உட்பட ஏனைய அனைத்து இனங்களினதும் கலாசார அடையாளங்களைப் பாதுகாத்து மாகாணத்திற்குத் தனித்துவமான கலைகள், அதேபோன்று மேற்படி கலைகளில் ஈடுபட்டுவரும் கலைஞர்கள் மற்றும் அவர்களது பல்வேறுபட்ட படைப்புக்களுக்கு ஊக்கமளித்துக் கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அத்திட்டங்களில் ஒன்று மாகாணத்தில் வாழும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கிவரும் எழுத்தாளர்களை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் எழுத்தாளர் கைநூல் வேலைத் திட்டமாகும். அதன்படி 2019 ஆம் ஆண்டிலும் கலாசார திணைக்களத்தினால் எமது மாகாணத்தின் கலைஞர்களுக்காக இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல்களை வடிவமைத்த எழுத்தாளர்களின் சிந்தனை, பல்வேறு அனுபவங்கள் மற்றும் ஆளுமைப்பண்பு அத்துடன் ஆக்கபூர்வமான இரசனைகள், இந்நூல்களில் உள்ளடங்குகின்றது. இதுபோன்ற பல அனுபவங்கள் இலக்கிய பணிகளானது போசாக்கிற்கு மட்டுமல்லாமல் கலாசார மேம்பாட்டுக்கும் மிகவும் உறுதுணையாக அமைகின்றது.

அதன் பிரதிபலன்கள் எதிர்காலத்தில் எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இதனுள் எழுத்தாளர்களின் சிறுகதைகள், கவிதைகளின் எண்ணக்கரு மற்றும் விமர்சனங்கள் உள்ளெடுக்கப்பட்டிருப்பதுடன், அது எழுத்தாவணங்களின் சிறப்பம்சம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நூல்களை பார்க்கும் போது அதில் காணப்படும் திறமை அடிப்படையிலான படைப்புக்கள் மொழியால் அலங்கரிக்கப்பட்ட, பட்டை தீட்டப்பட்ட, நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிலான பெறுபேறுகளை சுட்டிக் காட்டுகின்றது. அது எழுத்தாளரின் கைவண்ணமாகும்.

எவ்வாறிருந்த போதிலும் இறுதியாக இந்த நூல்களை வரைந்த எழுத்தாளர்களின் எதிர்கால வாழ்வுக்கு நல் வாழ்த்து தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலங்களிலும் இதுபோன்ற நற்பணிகளை மென்மேலும் வளர்த்துக் கொண்டு ஒரு சிறந்த எழுத்தாளராகும் பாக்கியம் கிட்டவேண்டுமெனவும் பிரார்த்தனை செய்கின்றேன்.

ஐ.கே.ஜி.முத்துபண்டா,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாணப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களில் கிழக்கு மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் ஒரு பெறுமதிவாய்ந்த பணியாகும். ஏனெனில் நூல் வெளியீடுகள் பொருளாதாரச் சுமை மிக்கதால் குறைந்த அளவிலேயே இடம்பெறுகின்றன. பல பிரதிகள் நூலுருப் பெறாமல் உறங்கு நிலைக்குச் செல்கின்றன. இவற்றை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக நூலுருவாக்கம், சிறந்த நூல் தெரிவு, நூல் கொள்வனவு என்பன கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தி - னால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான நூல்களை பிரசுரிக்கின்ற 2019 ஆம் ஆண்டிற்கான நூலுருவாக்கப் பணித்திட்டத்தினூடாக தங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு எழுத்தாளன் கற்றல், கற்பனைத்திறன், எண்ணம், அனுபவம், படைப்பாற்றல், ஆளுமை என்பவற்றைப் பயன்படுத்தி சீரான ஒழுங்கு முறைகளினூடாக ஒரு ஆக்கத்தைப் பிரசவிக்-கின்றான். இவ்வாறான பிரசவங்களினூடாக பல்வேறு ஆக்க இலக்கியங்கள் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. இவை சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்குரிய பண்பாடுகள் மற்றும் விழுமியங்களை எடுத்தியம்பி அடுத்த தலைமுறைக்கு அவற்றை எடுத்துச் செல்கின்றன.

2019 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலம் நூலுருவாக்கத்திற்கு கிடைக்கப்பெற்ற இருபத்து மூன்று (23) வகையான பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கங்களிலிருந்து எமது நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒன்பது (9) ஆக்கங்கள் பிரசுரத்திற்கு உகந்தவையாகத் தகுதியான நடுவர் குழாமினால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இங்கு இளம் எழுத்தாளர்களின் கன்னி வெளியீடும், மூத்த எழுத்தாளர்களின் விரிந்த எண்ண அனுபவ ஆக்கங்களும், அறிவியலும், தொழில்நுட்பமும், நாட்டார் இலக்கியம், சுயகவிதை, சிறுகதை, சிறுவர் இலக்கியம், புலமைத்துவம் சார் படைப்புக்கள் என பல்வேறு வடிவில் ஆக்க இலக்கியமாக நூலுருப்பெறுவது சிறப்பான ஒரு அம்சமாகும்.

"சதுப்புநிலக் கொக்கின் கால்கள்" எனும் இந்நூலின் நூலாசிரியர் தனது விரிந்த சிந்தனை, பரந்த அனுபவம் என்பனவற்றுடன் கூடிய மொழிவாண்மை மூலம் இதனைப் படைத்துள்ளார். இந்த படைப்பும் வாசகர் நுகர்விற்கு மிகவும் பொருத்தமானது என நம்புகின்றேன்.

அந்த வகையில் இப்படைப்பினை மேற்கொண்ட நூலாசிரியரை பாராட்டுவதுடன் அவர் மேலும் இத் துறையில் பிரகாசிக்க வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இத்தேர்விற்கு உதவிய நடுவர்கள் குழாத்திற்கும் சிறீராம் அச்சகத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியை நவில்கின்றேன்.

திரு. சரவணமுத்து நவநீதன்
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை...

காலத்தைக் காட்டும் கண்ணாடிகளே! இலக்கியங்கள் உடையாமல் காப்பது பெரும்பணி என்னைப் பொறுத்தமட்டிலே உணர்வு, அனுபவம், இயற்கை என ஒவ்வொருவரும் ஒவ்வொரு உணர்வுகளுக்குள் பயணிக்கிறோம். என்மனதை தொட்டும் பிறந்தவைகள் எனது கவிதைகள் எல்லாவற்றையும் எழுதிவிடவில்லை. மனக்கனதிகள் நிறைந்தவை இன்னும் தொடர்பவை.........

வற்றாத ஈரம் எனும் எனது முதலாவது தொகுப்புக்குள் இருக்கும் ஆதங்கம் ஈரமாகவும், செழிப்பாகவும் தொடர வேண்டும் என்பது தான், அதன்படியே புதிய தொனிகளோடு என் சதுப்புநிலக் கொக்கின் கால்களுக்குள் தவழ்கிறேன். கவிதைகளுக்குள் உலகங்கள் பயணிக்கிறது. ஓர் உணர்வு இசை மீட்டுகிறது. மனிதம் - தார்மீகம், நேர்மை - இயற்கை எல்லாம் சேர்ந்த ஒட்டுமொத்த நிலத்திற்குள் எனது கால்கள் பயணிக்கிறது. பயணத்தின் வழியே உங்களுக்குள் உலாவுகிறேன். எனது தொகுப்பை தேர்வு செய்த பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - கிழக்குமாகாணம் என்பதற்கு என்மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அணிந்துரையை வழங்கிய பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் சேர் அவர்களுக்கும், ஆசிரியர் ஜெஸ்மி மூஸா அவர்களுக்கும், பின்னட்டை குறிப்பு வழங்கிய மலரா அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இந்நூல் உருவாக்கத்திற்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத் தவிர எழுத்தின் மீதான தாகம் எனக்குள் எப்போதும் இருக்குமென நினைக்கிறேன். மொழியின் சிறகுகள் இதமானது. அவை தடவும் போது வளர்ப்பது நமக்குள்ளாகிறது. அதன் தீனிகளை நாமே தேட வேண்டும். இவ்வையகம் பலவிடயங்களை கொண்டிருக்கிறது. ஆனாலும் நமது சிந்தனைகள் நல்ல பாதைகளை நோக்கி நகர வேண்டும் என்பதே என்றும் உள்ள எண்ணமாகும். எல்லாவற்றையும் இறைவன் பொருந்திக் கொள்வானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரத்தின் கசிவு...

எழுத்தாக்கத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட பார்வைகள் கிளர்ந்தெழுகின்ற காலத்தின் விசை உந்துதலுக்குள் படைப்பக்கள் உள்வாங்கப்படுகின்ற நிலை பரவலாக்கப்பட்ட போதிலும் "பெண் மொழி" என்னும் அடைமொழிக்குள் நின்று படைப்புக்களைப் பார்க்க வேண்டிய தேவை இல்லாமல் இல்லை. அத்தேவைக்குள் நின்றே சித்தி றபீக்கா பாயிஸின் "சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்" என்ற இப்பிரதியினையும் பார்வைக்குட்படுத்த வேண்டியுள்ளது.

ஐம்பத்தியெட்டு கவிதைகளைக் கொண்ட "வற்றாத ஈரம்" வெளியாகிய அதே ஆண்டிற்குள் கிழக்கு மாகாண கலாசாரப் பிரிவினால் தேர்வாகி வெளியாகும் இப்பிரதி றபீக்காவின் எழுத்துக்களின் கசிவை பரவலாக்கும் ஊட்டச்சத்தாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

கிழக்கின் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர்களைப் பரவலாக்கிய மண் சம்மாந்துறை. கடந்த இரு தசாப்தங்களாக எழுதிவருகின்ற ஒருவராக றபீக்கா இருந்த போதிலும் வற்றாத ஈரம் பிரதியின் பின்னரே தம் நாமத்தை அவர் அடையாளப்படுத்தியுள்ளார் என்றே கூறலாம்.

இப்பிரதியின் பெரும்பாலான கவிதைகள் சிறுவர்களோடு தொடர்வுபட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிறுவர் சார்ந்த கவிதைப் போக்கில் அக்கறை காட்டுகின்றவர்கள் மந்தமாகியுள்ள நிலையில், அதிலும் குறிப்பாக பெண்களின் பங்கு அரிதாகியள்ள காலப்பகுதியில் அவர்களைப் பற்றிய தனிப் பார்வையாக இப்பிரதியை அமைத்திருந்தால் கவிதைகளின் உள்ளடக்கத்திற்கும் போக்குக்கும் தலைப்புக்களின் இளகல் தன்மைக்கும் பிரதி அர்த்தமுடையதாக மாறியிருக்கும்.

தந்தையின் மடல்- பளிங்கு வீட்டின் தூசி- எனது நாள்- எனது இரவின் அம்மா- கனவுகளின் சிதைவு- விடுதியே என் கூடு - பூவைத் தொலைத்த பட்டாம் பூச்சி முதலிய கவிதைகளில் சிறுவர் பற்றிய அவதானங்களில் தேர்வுக்குரியவை.

"பளிங்கு வீட்டின் தூசி" என்ற கவிதையில் சிறுவர் உரிமை பற்றிச் சிலாகிக்கின்றார். விளையாட வேண்டிய பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதில் வீட்டு வேலைக்காரிகளாகி விட்ட நிலையினை இக்கவிதையில் சுட்டிக்காட்டுகின்றார் றபீக்கா.

"இந்தப் பளிங்கு வீட்டின்

செல்லப் பிராணிகளுக்கான

தயவு கூட எனக்கில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முறையீட்டைக் கேட்பாரும் இல்லை" என தன் ஆதங்கத்தை வெளிக்காட்டும் கவிஞர் விளையாடிய பொழுதுகளும் மறைந்து விட்டன என்பதை "எனது நாள்" என்ற கவிதையில் தொடர விட்டுள்ளார் "இழுத்து வைத்து

பாடம் சொல்லித் தருவார்

யாரும் இல்லை" என்கின்ற வரிகளில் இதனைக் காணலாம்.

"பூவைத் தொட்ட பட்டாம் பூச்சி" எனும் கவிதையில் வரும்

"பிஞ்சாய் முளைத்த

என் இறகுகள்

என் பூவைத் தொலைத்து

முடங்கிக் கிடக்கிறது" என்கின்ற வரிகளும் கவனத்துக்குரியன.

சதுப்பு நிலக் கொக்கின் கால்களுக்குள் 49 கவிதைகள் உள்ளன. அவை சிறுவர் மீதான அவதானம் அவர்களின் இயல்புப் போக்கு, இயற்கையின் அரவணைப்பு, மனவெழுச்சிக் கோலங்கள், சமூக நோக்கீடு இவைகளைத் தாங்கியதாகவே கொக்கின் கால்களுக்குள் அகப்பட்டுள்ளன.

தெரிவுகள் முன்னோக்கிப் பாய்தலின் உந்துவாக இருந்த போதிலும் அது எம் கவிதைகளின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோலாகக் கொள்ளத்தக்கதல்ல. வெளிப்படுத்தல் ஊக்கமுள்ள கவிதைப் போக்கினை பரவலாக்கியுள்ள றபீக்காவின் எண்ண வெளிப்பாடுகளும் எளிமையும் இக்கவிதைகளில் தெரிகிறது. கவிதைகளைச் சமைப்பதற்கான கலைத்துவத்தை எட்டியுள்ள றபீக்கா கவிதை வாசிப்புக்குள் இன்னும் பல புதிதுகளைக் காண வேண்டிய தேவையுண்டு. அவ்வாறு காணும் போது தேசியத்தரம் மிக்க கவிதைகள் கசிய வாய்ப்புண்டு. அதற்கான எத்தனத்திற்கு எமது வாழ்த்துக்கள்


ஜெஸ்மி எம். மூஸா

முதுகலைமாணி-தமிழ்(சிறப்பு)

முதுகலை தத்துவமாணி-தமிழ்(ஆய்வுநிலை)

மருதமுனை

04.11.2019

077 36 246 90




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் பெண் எழுத்தாளர்களுள் றபீக்காவுக்கு இருபது வயதாவது இருக்கும் என்று எண்ணுகிறேன். 2000 ஆம் ஆண்டுகளில் சம்மாந்துறையிலிருந்து எழுதுகின்ற பெண் கவிஞராக நான் அவரை அறிந்திருக்கின்றேன். மூன்றாவது மனிதன் சஞ்சிகையிலும் முஸ்லிம் குரல் பத்திரிகையிலும் அவர் அவ்வப்போது எழுதி வந்தார். வானொலியிலும் அவரது கவிதைகள் சில ஒலிபரப்பாகியுள்ளன. ஆனால் நீண்ட காலமாக றபீக்காவின் கவிதைகளைக் காணவில்லை. இந்த சூழ்நிலையில் 2019இல் வற்றாத ஈரத்தோடு அவர் வந்தார். அந்த ஈரம் காய்வதற்கு இடையில் றபீக்காவின் இன்னுமொரு தொகுதி வெளி வருவது மிகுந்த ஆச்சரியத்தையும் மனமகிழ்ச்சியையும் தருகிறது.

"சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்" இது இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பாகும். இத் தொகுதியில் சுமார் ஐம்பது கவிதைகள் உள்ளன. காலம் உடைத்துத் தந்த கலகக் குரல்கள் இவரது கவிதைகளில் தெரிகிறது. தான் வாழுகிற சமூகத்தின் அசைவுகளை ஒவ்வொன்றாய் நுகர்ந்த அனுபவ துளிகளின் சிதறல்களாக அவரது கவிதைகள் அமைந்துள்ளன. பெண் என்பதை விட பெரும்பாலான கவிதைகளில் அவர் ஒரு சமூகப்பிராணியாகவே மேற்கிளம்புகிறார். அவ்வப்போது அறம் கூறும் ஆசானாக நமக்கு அவர் தெரிந்தாலும் அவரது கவிதைகளிலுள்ள கவித்துவம் மறக்க முடியாதன.

"மாதுளைச்செடியில்" அவரது ஏக்கமும் "பளிங்கு வீட்டின் தூசியில்" அவரது மிதப்பும் "வெளிப்படாத பிஞ்சு முளையில்" அவரது எண்ண வித்துக்களும் "எனது இரவின் அம்மாவில்" அவர் எழுப்பும் குரலும் கவித்துவத்தை விட்டும் வாழ்க்கையை விட்டும் றபீக்காவை நமக்கு தூரமாக்கவில்லை.

தற்கால கவிதைகளில் இருக்கின்ற புரிந்து கொள்ளப்படாத சேதிகள் எதுவும் றபீக்காவின் கவிதைகளில் இல்லை. அனுபவத்தின் உணர்வுகளை நமக்குள் அவை திணிக்கின்றன.

சதுப்பு நிலக்கொக்கின் கால்கள் றபீக்காவின் கவித்துவத்தை ஒருபடி மேலே உயர்த்திக் காட்டுகின்றது. அதேபோல் குயிலின் வளைவு இசையும் றபீக்காவின் கவித்துவ அற்புதங்களாகும். "போன் பூவில் எனது மகள்" சமகால சுவாரஸ்யமிக்க கவிதை எப்படியிருந்தாலும் எளிமையும் கவர்ச்சியும் மிக்க றபீக்காவின் கவிதைகள் தேவைக்காக எழுதப்பட்ட ஒரு சோபிப்பையும் காட்டுகிறது.

கவிதைகள் கவிஞனை இலகுவில் தொத்திக்கொள்வதில்லை அதுவும் எப்போதேதான் தொத்திக் கொள்ளும். அதுவும் நல்ல வாசிப்பும் நல்ல கவிதைகளின் சுவாசிப்பும் நமக்கு நல்ல கவிதைகளைத் தரும். இந்தத் தொகுதியின் மூலம் றபீக்கா எந்தக் கோட்பாடுகளுக்குள்ளும் சிக்கிக் கொள்ளாது தனக்கு பட்டவைகளை நமக்கு தொக்கச் செய்திருக்கிறார். உயர்வுகளின் விகர்ச்சிப்பான இக்கவிதைகள் வாழ்வின் அக உலகினை நமக்குக் காட்டுகின்றன. வீரியமான கவிதைகள் றபீக்கா மூலம் நமக்கு கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்
மொழித்துறைத் தலைவர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்...

01. குப்பையில் குண்டுமணி
02. தந்தையின் மடல்
03. ஒரு வேளை உணவு
04. மாதுளைச்செடி
05. பளிங்குவீட்டின் தூசி
06. நான் இல்லை கொத்தன்
07. எனது நாள்
08. வலிகள் துவட்டிய கைகள்
09. விழவைத்த போண்
10. வெளிப்படாத பிஞ்சுமுளை
11. எனது இரவின் அம்மா
12. பழங்கள்
13. நேற்றைய பள்ளியின் ஞாபகம்
14. விளக்கின் விழி
15. டியூசனுக்கு பின் நான்
16. சுனையின் அடியில் தவளை
17. பலாச்சுளை
18. முறிந்த பேனா
19. கனவுகளின் சிதைவு
20. விடுதியே என்கூடு
21. பூவைத் தொலைத்த பட்டாம்பூச்சி
22. சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்
23. புரியாணி
24. இரவின் மழை
25. ஏழைச் சிறுமியின் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. கண்ணாடித் தழும்புக்குள் பூச்சிகள்
27. கரைந்த காலங்கள்
28. நிறமற்ற கடலின் அன்பு
29. புனித றம்ழானே வருக
30. ஓர் இலக்கியத்தின் முடிவு
31. போதைப் பொருள் மரம்
32. சூழ்ச்சிகளின் வடிவங்கள்
33. வறட்சியில் நீளும் உயிர்களின் அசைவு
34. மொழியிடம் வசிகர முத்தம்
35. மின்வெட்டும் குழந்தைகளும்
36. குயிலின் வளையு இசை
37. போன் பூவில் எனது மகள்
38. பசுமையில்லா வசிய மரங்கள்
39. உழைக்கும் உனது கைகள்
40. மடல்களின் மறைவு
41. யுத்தம் வேண்டாம்
42. மலர்களின் இனிமை
43.வனங்களைக் காப்போம்
44. இரக்கம்
45. பள்ளியின் சந்திப்பு
46. மழை
47. பிரார்த்தனைக் காலம்
48. வாசிப்பு
49. இலைகள் விழுதுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. குப்பையில் குண்டுமணி

புள்ளத்தின் ஓரங்களிடையே
கசியும் துளி இரசனையால்
நிரம்பி வழியும் நீர் வளையங்களாகிறேன்

உதிர்ந்து விழுந்த கனவுகளில்
இறந்த காலத் தடயங்களின்
மங்கிய ஒளிகளை ஞாபகமூட்டி
நாணமுறுகிறேன்

என்புறத்திலிருந்தே அவாவுகின்றன
எனதின் மறைவுகளின் ஓசைகள்

மௌனம் உருவாக்கிய மலைத்தழும்புகளை
மேவிப்பாயும் நதிக்குள்
தொங்கி நிற்கும் மாறா நினைவுகள்
மனசில் உரசிச்சத்தமெழுப்புகிறது

கசப்புகளின் வலிகளெல்லாம்
இரவின் கறுப்புகளுக்குள்
மறைகின்ற நட்சத்திரங்களாகின்றன

மூழ்கிய கனவுகளைச்சிதைத்து
வெளிப்புன்னகையால் பூசுகிறாய்
குப்பையில் குண்டு மணியாய்
பள்ளத்தில் சரிந்தும் பதுங்கியுமிருக்கிறேன் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. தந்தையின் மடல்

அன்பார்ந்த ஆசிரியரே
என் மகனை
என் பிஞ்சு முளையை
உங்களிடம் தந்திருக்கிறேன்
கற்றுக் கொடுங்கள்

வாழ்வின் உண்மையைக் கற்றுக்கொடுங்கள்
இன்பத்திலும் துன்பத்திலும்
இதயம் நிமிர்ந்து
இதமாய் வாழக்கற்றுக்கொடுங்கள்

பண்பில் பணிவில் உயர்ந்தவனாய்
உண்மையின் உறவில் வளர்ந்தவனாய்
உலகம் போற்றும் உன்னதமகனாய்
உயர்ந்த கல்வியை கற்றவனாய்
உங்களிடம் நல்ல மாணவனாய்
என்று முயரக் கற்றுக் கொடுங்கள்

தந்தை தாய் பேணுபவனாய்
தானதருமம் செய்பவனாய்
தார்மீகம் சார்ந்த தலைவனாய்
தரணியில் தழைக்கும் தந்தை அவனாய்
நாளை மீளக்கற்றுக் கொடுங்கள்

தந்தை நான் இகைக்கூறுதலும்
குரு நீங்கள் உரைத்தலும்
எத்தனை உயர்வுண்டு புரிந்திடுங்கள்
இத்தனையும் கூறியவனாய் விடைதருகிறேன்
தந்தை இவனாய் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. ஒருவேளை உணவு.

என் வாழ்வாதாரம் பற்றி
நீங்கள் அறியவே இல்லை.

என்னை வலுக்கட்டாயமாக
பள்ளிக்கூடம் அழைத்துச் செல்கிறீர்கள்
சிறுவர் பாதுகாப்பு எனும்
கோஷம் முளைத்த இறுமாப்பில்

என்னைத்தட்டி விடமுடியாமல்
ஒரு வேளை உணவுக்குமலைத்து
என் கைவலி நோகுமட்டும்
ஒரு நாளை கழிக்கும்
என் குடும்பம் அறியாமல்

நான் என் செய்வேன்
மறுபடி மறுபடி
என் வாழ்வாதாரத்தைத் தேடுவேன்.

என் கைகள் கனம்
என் மனசுகள் சிதைவு
என் சுமைகள் பெரிது
யாரும் அறியவே மாட்டீர்கள்.

உணவு வேளை ஒன்றுக்காய்
அலையும் எனக்குள்
கல்விப்பசி எப்படி முளைக்கும் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. மாதுளைச் செடி

என்வீட்டு வாசலில்
மாதுளைச் செடியின் குடியிருப்பு

தண்ணீரை ஊற்றி
தனக்குள் ஆயிரம் வேண்டுதலைக் கோரி
தானமாய்க் கிடைத்ததை
தானும்தான் நட்டிருந்தேன்

கொஞ்சம் கொஞ்சம்மாய்
கொழுந்துகள் பலதுளிர்த்தும்
கொப்புகளாய் உயரவில்லை
சின்னவள் மகள் அவள்
சிரிக்கிறாள் அதன் இலையுடன்
விளையாடுவதற்காய்
கொய்தும் கொள்கிறாள்
இடைக்கிடை
எப்பம்மா பூக்குமென
என்னிடம் கேள்வியும் கேட்பாள்
நான் என்ன செய்வது
இன்று தான் பூக்குமா
நாளைதான் காய்க்குமா
என்னால் தான் முடியுமா

இறைவன் அவனிடம் தான்
இறைஞ்சுதலும் உண்டு
மழை பெஞ்சாத்தானே
மாதுளையல்ல எல்லாம்தான்
தளைக்கும் என்றபடி நிற்கிறேன் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. பளிங்கு வீட்டின் தூசி.

என்னை அடிமையாய்
நேற்றே விற்றபடி
உறங்குகிறாள் என் அம்மா.

ஒவ்வொரு நாளும் - நான்
பணக்கார எஜமானிக்கு
தோப்புக்கறணம் போட்டபடி
கூட்டிப்பெருக்கி
தூசுகளும் தட்டி
தொலைத்த வாழ்வாகி விட்டேன்.

பள்ளிக்கூடம் எனக்கில்லை
பளிங்கு வீட்டின் வேலைக்காரன்
ஏன் குருத்து மணல் வீட்டை
கட்டி முடிக்க முடியாமல் தவிக்கிறேன்.

இந்தப் பளிங்கு வீட்டின்
செல்லப் பிராணிகளுக்கான
தயவு கூட எனக்கில்லை
என் முறையீட்டைக் கேட்பாருமில்லை.

ஆனாலும் நான்
மூலையில் உட்கார்ந்தபடி
என்னைப் பார்த்துச் சிரிக்கும்
உருவமுள்ள உயிரற்ற(அந்த)
தொங்கும் குருவிப்படமிடம்
ஆறுதலாய்ப் பேசுகிறேன்
என் மனம் பற்றி •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. நான் இல்லை கொத்தன்

கொத்தனாய் மாறுவாயென்று
இன்று மட்டும் போ என்றபடி
நேற்று அமர்த்தியவர்கள்
மறைந்து விட்டார்கள்

முண்டுக் கல்லையும்
கொங்கீறீட் தூணையும்
அங்கும் இங்குமாய்
சுமந்து தாங்கும் என் தோள்
வலிப்பது பற்றி யார் அறிவார்

வீடு கட்டும் தளத்தில்
கற்களை கவனமாய்
அடுக்கிக் கொடுத்த படியே
என் கனவுகளை சிதைக்கிறேன்
வீட்டின் இடுபாடுகளுக்குள்
கீழ் மடியும் சிறிய கற்களை போல்

சூரியனின் பழுத்த வெயிலில்
தலையின் ஈரத்தை உலர்த்தியபடி
தலைவனாய் மாறினேன்
குடும்ப சுமையை ஏற்றி

சாந்தகப்பையின்
சமநிலைப்பாட்டில்
சமதரையைச் செப்பநிட்டு
சம்பளமும் பெற்றுக் கொண்டு
சாக்கடையில் விழுந்து விட்டேன்
சகபாடி நண்பன் அவன்
ஏனெடா பள்ளி வர வில்லையென
ஏளனமாய் வினாவுகிறான் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. எனது நாள்

பாலாறு, பாலாறு
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுக்கி அடிக்கும் பாலாறு
என முணு முணுத்தபடி
என் மாமா என்னுடன்
விளையாடிய காலமும் ஓடி விட்டது

பசுமைகள் அற்ற வெளியில்
வெறும் காற்றை குடித்து
கனவுகளில் மிதக்கிறேன்

நொறுங்கிச் சிதறும் என் உணர்வுகள்
பருவகாலத்தினுள் ஒடுங்கி
என்னைத்துரத்திச் செல்கிறது

இழுத்து வைத்து
பாடம் சொல்லித் தருவார்
யாரும் இல்லை

நிலா பழுத்து விழுந்தாலும்
நிலமை தெரியாமல் தொலைக்காட்சியில்
எல்லோரும் ஊறிவிட்டார்கள்

எனக்குத் தெரிந்ததை மட்டும்
என் மொழியில் வாசித்த படி
எல்லாம் படித்து விட்ட நினைவில்
இருந்த படியே சாய்கிறேன்
இனித்தான் இரவு தெரிவதாய்
எல்லோரும் வந்து பார்கிறார்கள் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. வலிகள் துவட்டிய கைகள்.

சின்ன விரல்களைச் சேர்த்து
சித்திரங்கள் வரையும் என் கைகள்
யார் அறிவார் என்னை
என் வறுமை பிடித்த பிறகு
என் அம்மாவை நினைத்தவனாக
நிறுத்தப்பட்டிருக்கிறேன்

தேநீர் கடையில் சிற்றூழியனாக
எனக்கு ஒரு டீ போடு
தம்பி இங்கே வா
இப்படி பல வேலைகளை
பம்பரம் போல் சுழன்று செய்கிறேன்

எனக்கு மிகுந்த ஆசைதான்
பெரியவனாயத் தலை நிமிர வேண்டுமென்று
வலையில் சிக்கிய மீனாய்
கடையின் கடலில் விழும்
மக்கள் கூட்டத்திற்காய்
பணிவிடைகள் செய்கிறேன்

என் கங்கையின் எதிர்காலம்
என்னை கரையாமல் இருக்க
என் ஆசைகளையும்
தேவைகளையும்
சிக்கனப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த எச்சில் பாத்திரங்களை
கூச்சமில்லாமல் கழுவிக் கழுவி
காசையும் தான் பார்க்கிறேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. விழ வைத்த போன்.

ஆசிரியர் வருவார்.
அழகாகப் பாடம் சொல்லித்தருவார்.

எனது புத்தகங்களிலிருந்து
பெருக்கல் பிரித்தலென
ஒவ்வொரு கணக்காய்ப்
படிப்பித்துத்தருவார்.

அடுக்கி அடுக்கி
மூளையில் பதிவு செய்து கொள்வேன்
ஒவ்வொரு தவணையிலும்
பெரும் அடைவு மட்டங்களைப்
பெறுவதற்காக.

வீடு சென்றுவிட்ட பின்னர்
விளையாட்டின் ருசி தனில்
மீட்டலை விட்டு விட்டு
மீனுக்கிரையாகும் பூச்சிபோல்
பாடங்கள் அத்தனையையும்
விழுங்கியும் விட்டேன்
விற்று விட்டாயா எனஉறுக்கி
(தம்பியென) ஏசி அடிக்கும் என்ராத்தா
உருட்டி உருட்டி போனில்
விளையாட்டைக் காட்டி – என்னையும்
விழுத்தாட்டி விட்டாள்
முட்டாளாய் மாறிவிட்ட நான்
மிச்ச நாள் அத்தனையையும்
மிக மிகக் கவனமாய்க்
கணக்குப் பார்க்கிறேன்
கணக்குப் பாடத்தை மீட்டுதல் போல •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. வெளிப்படாத பிஞ்சு முளை

எங்கள் இயல்பு வாழ்வு
எங்ஙனம் முளைக்கும்
பசுமைத்தரை எங்கிலும்
விசுறப்பட்டிருக்கிறது காயவிதைகள்.

நுனி மட்டும் நாக்கு நீட்ட
கண்களே தெரியாத
எமது விதைகளை
எப்படி நோவது

நியதிகளின் கைபிடியில்
வெளிப்படாது தொங்கியபின்
முளைத்த வித்தாய்
எப்படி நீளும்

நிறமுமில்லாமல் ஓசையுமில்லாமல்
வெறும்பதர் வித்தாய் மிதக்கிறது

மழைகொட்டி
ஓய்ந்த பின்னர் - உழவியும்
மூக்கே இல்லாத
வித்தின் முளை
எப்படித்தரித்தல் இயலும்

பல்லாயிரம் முளைகளுக்குள்
எங்கள் இயல்பு வாழ்வின்
முளைகளை
எப்படி விதைப்பேன்
வெளிப்படாமல் அழிகின்றன
அத்தனை எண்ண வித்துக்களும் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. எனது இரவின் அம்மா.

வெளிநாடு சென்று விட்ட அம்மாவிடம்
எனதின் கருகிய மனமதை
இரவின் நித்திரையில் மீட்டுகின்றேன்

எனது கனவுகளின் திரட்சியை
தொடர்ச்சியாய் மேய்க்கிறேன்

வளைவுப் பாதையெங்கும்
என் அம்மாவைத் தொலைத்த பதிவு
பயண வடுக்களைச் சாந்தப்படுத்தும்
என் அம்மா என்னிடமில்லை
விழுங்கிக் கொண்டிருக்கும்
இவ்விரவுப் பொழுதிலும் யாருமில்லை

வண்ணத்துப் பூச்சியாய் நான் இருந்தும்
தொட்டுப் பார்ப்பவர் இன்றி
தயங்கிப் புரளுகிறேன்

கண்ணே மூடாத என் தூக்கம்
விடியலை நோக்கிய பொழுதாய்
காலை உயர்த்திப் பார்க்கிறது

எதிர்க்கரையில் நின்ற படியே
தூங்கு மகன் என்கிறாள்
தாலாட்டுப் பாடாமல் போன்போடும் அம்மா

என்னைத் தடவிப் பார்த்து
என் நிறங்களைப் பிரித்து
முத்தம்மொன்றை
நித்தமும் தரும் அம்மாவை
எனது இரவும் வேண்டியபடி நிற்கிறேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. பழங்கள்

இனிமையின் கூட்டமாய்
ஊட்டச்சத்துகளின் உறைவிடமாய்
உலாவரும் மரங்களிலே
தேனூறும் சுவை தருமே

பயன் தரும் தருவினிலே
பல்வகைப் பழங்களுமுண்டு
பேணிப் பயன் பெறுவோம்
பொறுப்பையும் எம்முள் விதைப்போம்

மா – பலா – வாழையாய்
மஞ்சள் நிறப்பழங்களென
பல வண்ணப்பழங்கள்
வகை வகையாய் உண்டு

பாரினில் நாமெல்லாம்
பழங்கள் எமக்காகப்
பயனுறும் மரங்கள் நட்டு
பொறுமையில் சிரம் கொண்டு
பொலிவாய்ச் சொலித்திட
பழத்தோட்டங்கள் பெருகிட
உயர்வுறும் தியாகங்கள்
உங்கள் அனைவரிடமும் விதைக்கட்டும் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. நேற்றைய பள்ளியின் ஞாபகம்

எனதின் மகளை
பள்ளியிலிருந்து அழைத்து வரும்போது
எனக்குள் நுளைகிறது
ஒற்றைக்காம்பின் நுனியில்
பழுத்திருக்கும் பள்ளியின் நினைவுகள்.

சிறகிருந்த நினைவுகளோடு
பட்டாம்பூச்சியாய்ப் பறந்து
வாழ்வின் இலட்சியங்களை
ஆசான்களிடம் ஒப்புவித்த
ஒப்பந்தங்கள் மனசுள் மேவிப்பாய்கிறது.

ஒவ்வொருவரதும் ஒப்புவித்தல்கள்
வைத்தியராய், ஆசானாய், இஞ்சினியராய்
இன்னோரன்ன பட்டியல்பட்டது.

இலட்சியங்களின் இமைகள்
குறையாகவும் குனுகலாகவும் மாறிவிட்டது
அவகாசமின்மையாய்
அழியப்பட்டிருக்கும் ஒப்புவித்தல்களை
வாழ்வின் தருணங்கள்
அழித்திருக்கிறது.

நேற்றைய பள்ளியின் நினைவுகள்
வழிந்து ஓடியதின் பின்னர்
குறையாய்த் தெரியும் இலட்சியக் குடுவைகள்
வாழ்வின் முழுமையை மீட்டி நிற்கிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. விளக்கின் விழி

இருளின் நிறங்களில் நான்
தூங்கிக் கொண்டிருக்கிறேன்

உயர்ந்திருக்கும் ஆகாயத்தில்
மிதக்கின்ற கனவுகளில்
உன்னோடு உலாவுகிறேன்

எனதின் கண்ணீர் நிறைந்த கடலில்
உன் வழியைத்துவட்டுகிறாய்
விழிக்கச்செல்லும் அசைவுகளில்
என்னைத்தழுவியும் பற்றியும்
உனதன்பினைப் பதிக்கிறாய்

திரண்டெழும் ஒளிக்கற்றைகளை
வீசித்தடவியே அணையாதிருக்கிறாய்
இடைவெளியில்
மறுகணம் மாறும்
தாளச்சத்தங்களிடையே
உறங்கிப்போயிருந்தேன்
இருளின் வடிவத்தை
மாற்றுதல் விழிகளில் காட்டி
விளக்கின் உயரத்தைப் பிடிக்கிறாய்

அணையாமலும் வெளிச்சமாயும்
நிலைத்திருக்கும் விழியாய்
எனக்குள் விளக்காகிறாய் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. டியூசனுக்குப் பின் நான்

என் மாலை வகுப்பு நேரம்
மணி அடிக்கிறது
தூக்கத்தை விட்டும் எழும்புமாறு

என் வீட்டு வாசலில்
துள்ளி விளையாடும்
பூனைக் குட்டிகளின்
சுவாசம் கூட எனக்கில்லை

அம்மாவிடம் செல்லம் காட்டி
சினுங்கி விளையாடி
பலூனெல்லாம் உடைத்து வெகுகாலம்

கனாக்காணும்
காலங்களை மறந்து
தவணைகளைக் கழிக்கும் போது
கூடிய மதிப் பெண்கள் பெறுவது மட்டுமே
இப்போது பதிவு செய்யப்பட்டிருக்கிறது

பாடங்களைச் சுமக்கும்
எங்கள் சுதந்திரங்களுக்குள்
மன ஆரோக்கியம் கேட்கிறார்கள்

மூலை முடுக்கெங்கும்
முளைத்திருக்கும்
டியூசன் வகுப்புக்களை கேட்காமல் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. சுனையின் அடியில் தவளை

நேற்றடித்த வெள்ளப் பெருக்கில்
அலைகிறது வால்பேத்தை

ஏதோ ஒன்றின் புரியாத புதிர்
உள்ளணுக்களைத்துளைத்து
கருக்கட்டிக் கொள்கிறது.
வால்பேத்தையாய்க் குடம்பியாய்
சொற்குழம்புகள் உருவாக்கப்படுகிறது.

கசிந்து பெருகி
நிறையுடலியாய் வளர
காலத்தின் கைதி
தகைமை சார் அடுக்கப்பட்டிருக்கிறது

நிறங்களைப் பிரித்தறிய
வாசிப்புத் தேவையும் நிரந்தரம்
உட்கார்ந்திருந்து
உற்றுப்பார்த்து வால்பேத்தையை
மேல் கிழம்பும் சுனை
நீர் வளையங்களால்
நிரப்பிக் கொள்கிறது.

அடியில் ஒட்டியிருக்கும் ஊற்றை
தவளையின் கால்கள்
வழிந்தோடச் செய்கிறது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. பலாச்சுளை

இனிப்பேன்
இன்னும் இனிப்பேன்
போர்வையாய் மூடியிருக்கும்
முட்களைப் பயமில்லாமல்
வெட்டிப் பார்க்கலாகிறேன்.

பிசின்கள் பற்றிய அச்சம்
கத்தியில் ஒட்டிக் கொள்ளும் வேகம்
கூர்மையை மழுக்கித்துப்பி
கூடைக்குள் குப்பையாய் முடங்கி
சுளையற்ற பிச்சியாய்ப் பார்க்க
மூக்கைத் துளைக்கும் மனம்
பக்கத்து வீடெங்கும் வீச
பெரும்பழமொன்றை வாங்கியதாய்
ஒவ்வொருவரும் பேசுகின்றனர்.

என் ருசிக்கும் பழம்
இன்னுமொரு வித்தை சொல்லி
தாவிக்கொள்கிறது எனக்குள்
வெட்ட முடியாமல்
பலாப்பழத்தைத் தூக்க முடியாமல்
முள் குத்தும் பயத்தைக் கிழித்து
விழித்துக் கொள்கின்றன
சுளைகள் ஒவ்வொன்றாய்........ •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. முறிந்த பேனா

முறிந்திருந்த என் பேனாவை
முகம் பார்த்துச் சிரிக்கும் தாள்
பற்றிக் கொள்ளும் உதடுகளுக்குள்
மனசைக் கவரும் சொல்வரிசை

இச்சையில் திரும்பக்குருவி
இனியவைகளைக் கொறிக்கிறது
இதயம் குளிர்ந்து போய்
தூக்கம் இன்றித்துவண்டு நான்
விழித்தெழுந்தேன் பேனாவுடன்

ஈரங்களைக் காணாமல்
மனம் குடித்த பாலாறில்
வரண்டு போய்க் காய்கிறேன்
முடியும் முளைக்கும் என்பதாய்
பெரும்ஆலமரம் எனக்குள்
விதை ஒன்றைத் தூவுகிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. கனவுகளின் சிதைவு

விளையாட்டின் விரும்புதலுக்கு நடுவே
கவலை முனைகளால் நீளும்
பெரு வெளி நான்

கதைகள் நிறைந்த என் வெளிக்குள்
சந்தோசமும் நிம்மதியும் வெறும் உப்பு

கனவின் மழைகளைக் கரைத்து
அப்பாவின் குடிவெள்ளத்தில்
தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்

இரு கைகளாலும்
அணைக்க முடியாத போதையில்
மகளே என்கிறார்
கழுத்தை மீறி மூழ்கும்
இப்பெரு வெள்ளம்
என் வெளியெங்கும் ஓடி நிற்கிறது

பெருகும் கண்ணீர் மழை
உப்பாய்க் கரைந்து கடலில் பாய்கிறது

பல்லாயிரம் தூசுகளின் படிவுகள்
சொட்டுச் சொட்டாய் நனைத்து
ஆழ்ந்த பதிவுகள் புதைக்கிறது

எத்தனை கனவுகளைச் சிதைத்தும்
அழுகைக்கும் கவலைக்குமான
பெருங்கடலில் நீந்துகிறேன் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. விடுதியே என் கூடு

அழுது அடம்பிடித்து
அம்மாவின் முந்தானையைப் பிடித்து
சூப்பி ஒன்றைத் தருமாறு
வேண்டியபடியே - இன்னும்
பிரிந்து நிற்கிறேன்

எனது மாலை வகுப்பு
தொடங்கும் நேரம்
பச்சிளம் குட்டி நீ
படிக்க வந்து விட்டாயா
குறும்பாய்ச்சில கேள்விகள்

கல்வியின் செல்வத்தை
கவனமாய் பற்றியபடி
கருத்தாய் நிமிர்ந்து நில் - என
வழி அனுப்பி வைத்தவள் என் அம்மா

இருப்பின் அவசியமும்
தேடல்களின் இனிமையும்
நாளை தான் உனக்குள் முளைக்கும்
பச்சிளம் குட்டி என்றாலும்
படித்தலே உனது வீடென
விடுதியில் விட்ட படியே
விடைபெற்றாள் என் அம்மா

பாசாங்கு செய்தபடி
விடுதியின் வாசலில்
பகல் பொழுதை கழிக்கிறேன்
படிப்பதை பார்த்து அறிய
கமராவும் பூட்டியிருக்காம்
இப்போதுதான் நண்பன் சொன்னான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பூவைத் தொலைத்த பட்டாம் பூச்சி

என் சிறகுப்பட்டைகள்
பாதுகாவலர்களைத் தொலைத்து
நுண்ணிய துளைகளால்
நொறுக்கப்பட்டிருக்கிறது

புகைமண்டலமாய் வானம் இருட்டி
என் மெல்லிய கனவுகளைச் சுருட்டி
பசுமையற்ற பாலைவனத்துள்
துரத்திச் செல்கிறது

உங்கள் புலன்களிலிருந்தும்
இன்னும் நான்
தூசியாய் கிடக்கின்றேன்

சற்று உயர்த்தி விடுங்கள்
என் கால்களைத் தூக்கி விடுங்கள்

அந்தப்பூவின் மணம்
என் மூக்கைத் துளைக்கிறது
வசந்த காலத்தைக் கசக்கியபடி
தாழ்வாரத்தில் மிதக்கிறேன்

என் சகபாடிகள்
கல்வியை நுகர்ந்தபடி
கவலைகள் அற்று
பறந்து பாடிக் கொண்டிருக்கிறார்கள்

பிஞ்சாய் முளைத்த
என் இறகுகள்
என் பூவைத் தொலைத்து
முடங்கிக் கிடக்கிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. சதுப்பு நிலக் கொக்கின் கால்கள்

இப்பெருவெளியின் சதுப்புக்கழனிகளில்
தாவிக் கொள்கிறது கொக்கின் கால்கள்

செம்மஞ்சள் நிறச்சந்தர்ப்பங்களை
எதுவும் புரியாத உணர்வுகள்
அகத்துள் நுழைந்து மேவிக்கொள்கிறது

அறுவடையின் பின்னரான நிழல்
விளைச்சலைப் பெருக்கி
பெரும் மூட்டைகளாய்க் குவிக்கிறது

தழும்புகளைப் பொத்தியபடி
தகர்த்துப்பொடியாக்கும் உணர்வுகள்
துகள்களின் வடிவங்களை
நீலக்குயிலின் (இசைத்து) மீனல்களோடு
இசையால் நீள்கிறது

கண் இமை எங்கும்
வாய்க்காலின் தெளிந்த சாயலை
பெருக்கிக் கொள்கிறது பேராறு

மடித்துக்கொள்ள முடியாமல்
அமர்ந்திருந்த கால்களை
கொக்கின் அலகுகளின் செழுமை
மீன்களை செதில் நீக்கி
ததும்பி வழியச் செய்கிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. புரியாணி

அள்ளிச்சென்ற வாசனையில்
தாழித்த கூட்டை நுகர்த்திருக்கிறார்கள்

எப்படியும் வருவார்கள்
பணப்புற்றுக்களிலிருந்து
புறப்பட்டு வருவார்கள்
பொரித்திருக்கின்ற
நாட்டுக்கோழியை ருசிப்பதற்காக

பச்சை பச்சையாய் சம்பலும்
மரக்கறிகளும் சேர்த்த
கூட்டுத்தட்டாய் வழித்திருக்கிறேன்
கண்ணைப் பறிக்கும்
மஞ்சள் நிறமுடன்
தக்காளி சோஸும் என்னருகில்
இழுத்து வருபவர்கள்
இன்னும் சற்றே நிமிடத்தின் பின்
எப்படியும் வருவார்கள்
கைகளால் அழைத்து வைக்கவும்
தரமான சாப்பாடு என வயிறு புடைக்கவும்
மியா என்று கத்தும் பூனைக்கு கொடுக்கவும்
நேற்றே தயாராகி விட்டார்கள்
இப் பெரும் ஹொட்டேலுக்கு
மீண்டும் விட்ட பின்னர்
எப்படி என்னை ஒளிக்க முடியும் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. இரவின் மழை

வீசும் புயற்காட்டில்
சுருளும் இலையாகினேன்
கலைந்தே போய்விட்ட
கனவுகளின் மேகங்களை
சூலாக்கிக்கட்டும்
சொற்களஞ்சியங்களை
இரவின் மழைக்குள் கொட்டுகிறேன்.

அங்குமிங்குமாய்த் தொங்கும்
தேன் கூடுகளின் இரசனையை
குயிலின் இசையமைப்பினால்
சாந்தமாய் தடவிப்பார்க்கிறேன்

யுகங்களின் சவால்கள்
சாப மரத்தடியில் புதைந்தும்
மறையும் மின்னல்களாகின்றன
நட்சத்திரங்களின் வெளிச்சங்கள்
கண்களை நிரப்புகின்றன
எதிர்க்கரையில் வீசும்
உணர்காற்றின் வேகம்
சுட்டுத்தாவுகிறது மறுகணம்
மழையின் குளிர்மிகு உணர்வு
வெப்பத்தை தணிக்கை செய்து
இதம் தரு மழையாய் பெருக்குகிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. ஏழைச்சிறுமியின் பாடல்

இரங்கல் குரலில்
இலைக்கறி விற்கிறாள் சிறுமி
சின்ன விரலுக்குள்
அத்தனை பைகளையும்
பற்றிப் பிடித்த படி
பாடலாய்க் கூவுகிறாள் (இலைக்கறி இருக்கோ)

தாயைப் பிரிந்த சோகமும்
தனியாய்ப் பறக்கும் சிறகுமாய்
தலையாட்டிய படியே நகர்கிறாள்

அந்தப் பிஞ்சின் இரங்கலில்
அலையும் வாழ்வின் பாடல்கள்
அழகாய்த் ததும்பி வழிய
கனவு ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கிறது
அவள் முகம் எங்கிலுமாய்

இழையோடும் காயங்களில்
இசைக்கும் அவள் குரல்
இரங்கி நிற்க
இளையவன் ஒருவன் அவன்
ஏறும்மா தங்கை நீ
ஏற்றம் உனக்குண்டும்மா
இனிக்கவலை இல்லையம்மா

உனதின் வாழ்விலும்
இனிமை உதிக்குமம்மா
என்றழைத்தபடியே
ஏழைச் சிறுமியவளை
ஏற்றியே விட்டான் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. கண்ணாடித்தழும்புக்குள் பூச்சிகள்

தழும்புகளின் வலியிலிருந்துதான்
வண்ணத்துப்பூச்சிகளின் ஸ்பரிசத்தில்
உயிர்த்தெழுந்தேன்

பசுமையின் நினைவுகளிலிருந்து
பட்டாம்பூச்சிகளின் சிறகடிப்புகள்
எல்லையிலா அவாவுதலை வீசியது

இங்கும்அங்குமாய்
வாழ்வின் பெருக்குதல் வீணைகளை
இசைத்துக்கொண்டிருக்கும்
பூக்களில் மேவிப்பாய்ந்தேன்

அவிழ்த்தும் அவிழ்க்காமலும்
தழும்புகள் ஒட்டிக்கொள்கிறது
முகத்தில் இனிதாய் வழங்கும்
தொடுகையின் பேரானந்தம்
ஒவ்வொன்றாய்ப்பாயும் வண்ணத்துப்
பூச்சிகளின் மேலாகிறது

தடவியும் மேவியும்
பூச்சிகளின் ஸ்பரிசத்தில்
எனக்குள் முழுச்சிறகையும்
பரிசளிக்கிறாய்
ததும்பி வழியும் ரணங்களின்
வலிகளுக்குள் என்னை மீளவும்
மீளவும் ஸ்பரிசிக்கிறாய்......
ஸ்பரிசத்தின் மேவுதலை மீறி
கண்ணாடித்தழும்புகள் கனத்துப்
பெயர்வதையும் முளைத்து ஊர்வதையும்
பூச்சிகள் - நுகர்கின்றன •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. கரைந்த காலங்கள்

எல்லையற்ற நமது கணங்களை
வாழ்வின் கடத்தல்கள் விழுங்கி விட்டது.

அங்கே புதைந்துள்ளவைகளை
மீட்டிக்கொள்ள முடியாமற் போகிறது.

பெருந்துயரங்களின் பாதைகள்
மனதைப் பிழிகிறது

உதிர்த்திய கணங்களை
அள்ள முடியாமற் போகிறது
திருப்தி காணா விட்டாலும்
நம்மைக் கரைத்திருக்கிறோம்

அதே கணம் எஞ்சிய வாழ்வுதனைக்
காலத்தின் நுனியில் கட்டியிருக்கிறோம்
இழந்தவைகளைச் சிந்தித்தல்
மீளாத்துயரமாகிறது
நம்மைக் கரைத்து
நம்மைச் சிதைத்து
நம்மைப் புதைத்து
வாழ்தல்களைத் தொலைத்து
எங்கேயோ முட்டும் போது தான்
கணங்கள் மீதான
அவாவுதல் நீள்கிறது
கணங்கள் துளிக்குள் மேவும்
நுரை பொதித்த பெறுமதியானது
கரைத்துப் பொங்கும் போதுதான்
காலத்தைப் பிடிக்கப் போகிறோம் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. நிறமற்ற கடலின் அன்பு

பெயர்த்தெடுக்க முடியா அன்போடும்
அதன் ஒன்றித்த முத்தங்களோடும்
உணர்வுக்குள் பெற்றோராய் மிதக்கிறேன்

பொங்கி வழியும் துயரின் மேல்
மழைகொட்டும் கடலில்
நிறமறியா அலையாய் விழித்து
பரந்தும் விரிந்தும் கிடக்கிறேன்

குழந்தைகளை உச்சிமோரும் தயவின்
பேரன்பைப் பொழிகிறேன்
மோதும் காற்றை உதறி
வண்ணங்களைப் பிரித்து
வாழ்வுப் பாடங்களைப் பரிசளிக்கிறேன்

வளர்ப்பில் மோதும்
வழியும் இசைவில்லா இயக்கங்களை
சமரசம் செய்து கொள்கிறேன்

பெரும் போராட்டமாய் மோதும்
பெற்றோர் உறவுகளில் காணும்
உளப்பக்குவம் மேவி இசைந்து
உறையும் ஈர அலைகளில்
எனதன்புப் பெற்றோராகிறேன்

உணர்வுகளுக்குள்ளே
மலையும் வனமும் நிறைந்த
பெரும் பிரபஞ்சம் உண்டு
வெளியற்ற சிற்றலைகளுமுண்டு
எவ்வலையாய் எழுந்தும்
அன்பில் புரளும் மிதந்து வழியும்
நிறம்மாறாக் கடலாய் நிற்கிறேன் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. புனித ரம்ழானே வருக

உன் புனிதத்தின் வாசலை
நுழையக் காத்திருக்கிறேன்
உன் தரிசனத்தில்
இறை இல்லங்கள்
இலங்குவதைக் காண்பேன்

இறையருளை உணர்வேன்
புனிதக்குர்ஆனை பார்க்கவும்
தொழும் கூட்டமாயும் சமூகம்
மீண்டெழுவதைக் காண்பேன்

இரு தசாப்தங்களின் முன்
இனிதாய் ஒலிக்கும் - பாவாவின்
றபானின் இசைத்தல்களும்
ஹஸ்தாக்களின் கனிவும்
ஒளிந்தும் மறைந்தும் மங்கியே விட்டது.
தவறுகளுக்காய் உணர்ந்து கையேந்தும்
தெளபாக்களின் ஒலிகள் கோருகின்றன
பேர்ச்சைகளின் கஞ்சிகளின்
நுகர்வு காலத்தின் மீது
குழந்தைகளும் அவாவுவர்

சடையாய் ஜொலிக்கும்
சாட்டையாய் அடிக்கும்
எண்ணற்ற தூய்மையை
எடுத்துரைக்கும் குத்பா பிரசங்கங்கள்
வெள்ளிதோறும் உயிர்த்தெழும்
தொழாதவர் - சிறியவர் - பெரியவர்
ஒவ்வொருவராய்
பள்ளியை நிரப்புவர்
புனித ரம்ழானே வருக •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. ஓர் இலக்கியத்தின் முடிவு

என் நேற்றைய இழப்புக்களோடும்
வாழ்வு சொல்லும் பாடங்களோடும்
இன்றென் புத்தக அலுமாரிதனை
புரட்டிப் பார்க்கிறேன்.

என்னைத் தேற்றிய பாராட்டுப் பத்திரங்கள்
பத்திரிகையில் கத்தரித்த
என் படைப்புக்கள்
இலக்கியம் தொடர்பிலான ஆவணங்கள்
கூடவும்

முழுமையாக எழுத முடியாமல் போகும்
என் உள் வாங்கல்கள் எல்லாம்
பத்திரப்படுத்தப்பட்டு
திறப்புக் கோர்வையையும்
என்னுள் வைத்திருக்கிறேன்.

நிதானத்திற்கப்பால்
ஏற்கப்போகும் வாழ்வுதனில்
இலக்கியத்தின் கதிக்குமுன்
இன்றுவரை
என்னைப் பற்றிப் பேசிடாத
இலக்கிய உலகம்
என் மரணத்தின் பின்
எதைப் புதிதாய்ச் சொல்லும்

இலக்கிய உலகம்
எனக்கு மட்டுமல்ல
நாளைய நாளிலும்
இலக்கிய வாதியை
உயிர்புகளின்றியே
மரணிக்கச் செய்யுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. போதைப் பொருள் மரம்

கஞ்சனாயிருந்தாலும்
பெருந்தஞ்சமெனப் புதைந்து
மீதிச்சாவைத் துரத்தி
தொடர் சங்கிலியாய் - உனக்குள்
வாழ்வைத் தொலைத்து
மீளாத்துயருக்குள்
உன்னையும் நாட்டையும் சீரழிக்கிறாய்.

மனிதனில் புனிதத்தை இழந்து
மாணவர் கூட்டமெங்கும் சீர்கேடு
தலைதெறித்தோடி யோடி
கடைத்தெருவெங்கும் பரவும்
போதைகளின் கூட்டுகள்

வார்த்தைகளில் வழுக்கி வழுக்கி
மீண்டும் முளைத்து முளைத்து
ஊரெங்கும் நாடெங்குமென
போதைகளின் மமதைக்கூறுகள்

வீணாய்ப்புதைந்து
மாயத்தலைகளால் நீளும்
காயத்தடைகளை எழுப்பும்
வாழ்க்கை கூடெங்கும் நுகர்வுமாற்றம்
கஞ்சாவாய் - பீடியாய் -
சிகரட்டாய் - அவினாய் -
மற்றும் இன்னோரன்ன
பெயர் அறியா மறை பொருளாய்
சமூகம் எங்கும் முளைத்தும்
பரப்பியும் உன்மரத்தை நட்டிருக்கிறாய் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. சூழ்ச்சிகளின் வடிவங்கள்

அநியாயம் இழைக்கப்படுவதை
பெருஞ்சுவர்கள் கேட்டிருந்தன

மறைந்தும் மறையாததுமாக
அதன் தரவுகளைச் சுமக்க முடியாமல்
பெரும் குப்பையில் நகர்த்தின

திட்ட வரைவுகளைக் கீறும்
பெருநண்டுகளின் விரல்கள்
அப்பாவித்தனமாய் ஓடி ஒளிகின்றன

பொய்யும் மாயையுமாய்
போலிகள் நிறைந்த தளங்களில்
மீன்குஞ்சுகள் செத்து மடிவதையும்
திட்டமிட்டே தயார் செய்யப்படும்
காய் நகர்த்தல் மனோபாவத்தை
வெட்டித்தகர்த்த முடியாமல்
பார்த்துக் கொள்கிறது
மொட்டை மரத்தில் நிற்கும் கிளி

சூழ்ச்சிகளின் திரள் வடிவங்கள்
கூட்டுப்புழுக்களாய் மொய்க்கும் நேரம்
பெருந்தலைகள் விழுங்குவதையும்
உற்று நோக்கியபடியே நிற்கிறது கிளிக் கூட்டங்கள்
பெருஞ்சுவர்கள் இடியும் தருணம்
ஏதுமறியா கிளியின் சொண்டுகள்
விரித்துக் கொண்டிருந்தது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. வரட்சியில் நீளும் உயிர்களின் அசைவு

வரட்சிக்காலம் ஒன்றில்
வெயிலில் வெந்தபடி செல்கிறேன்
மழையின் முதல் மழையாய்
நனைதலின் ஈரங்களைத்
தொப்பெனக் கொட்டி
பூமியைச் செழிக்கச் செய்யும்படி
ஒவ்வொரு உயிரும் அவாவுகிறது.

வரட்சியின் நீட்சியை
மரங்களின் வேர்களும் பிடித்திருக்கிறது
பறவைகளும் கால்நடைகளுமாய்
ஈரங்களைத் தேடி வானில் பறக்கிறது
மழையின் ஏக்கத்தை நுகர்ந்தபடி
நானும் சாலையைக் கடந்து செல்கிறேன்
சிந்தனை களில் மடிந்த
பெரும் மூச்சுகளைக் கோர்த்து
பிரார்த்தனைகளும் - வேண்டுதலும்
கரங்களால் உயர்ந்து நீள்கிறது
என்னைத் திரும்பி நோக்கும்
பறவையின் அவாவுதலும்
பிளந்து வெடிக்கும் நிலத்தின் கீறலும்
மழையைத் தரிசிக்கும் வேகமாய்
உயிர்களின் உணர்வுகளைக் கொய்து
இறையின் உண்மையை விழித்து
எப்படியும் மழைகொட்டும் என்ற
சொட்டு உணர்வில் நானுமாய்.... •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. மொழியிடம் வசீகர முத்தம்

நான் தரிசிக்கும் புத்தக வீட்டில்
என் கண்கள் விழிக்கிறது

மொழியின் வழியில் விழித்து
தாளில் எழுத்தாய்ப் பொறித்து
மீள்தலின் தடமாய் நிமிர்ந்து
நீள்தலின் தாகமாய் தீர்த்து
குடித்தும் குளித்துமாய் நிரப்புகிறேன்

மொழியின் அழகியலும்
தளைத்தலின் தார்மீகமும்
வசியமாய் எனக்குள் பரந்து
வளைவுகளின் வலிகள் சொல்லி
எனது வருகையின் தருகையாகிறது

மௌனமாய் உறங்கிய எழுத்துக்கள்
உயிரென உயிர்த்து மீள்கிறது
எங்கோ தொங்கி நிற்கும்
இரசனையின் தாகமும் நீள்கிறது

மொழியும் வழியும் கூர்ந்து
அசையும் அலையில் பறந்து
தசையும் தடமும் கொடுத்து
தாவுவதாகவும் முளைப்பதாகவும்
கூண்டிற்குள் கிளியற்றுப் பறக்கிறது

மொழிக்குள் என்முத்தம்
விழிக்குள் என்ஞாபகம்
விழித்தெழுந்தேன் என் நூலுடன் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. மின்வெட்டும் குழந்தைகளும்

மெழுகுதிரி வாங்யல்லியம்மா
லாம்பெண்ணெய் வாங்கினயம்மா
டோர்ச் லைட் வெச்சியம்மா
நெருப்புப்பெட்டி எங்கம்மா
இப்படித்தான் கேட்குதுகள்
எங்கள் செல்லக் குழந்தைகளும்

என்னத்தை சொல்வேன் நானும்
வாழத்தான் பழகினோமே
முன்னைய காலமெல்லாம்
ஹீட்டரும்தான் காணவில்லை
அயம்பொக்ஸும் கண்டதில்லை
வோசிங் மிசினும் எனக்கில்லை
கொம்பியூட்டரும் தெரிஞ்சதில்லை

மின்சாரந்தான் இல்லாட்டி
இத்தனை சாமானும் தான்
இயங்கத்தான் முடியுமோ
இதயம் தான் துடிக்குமோ
அத்தனையும் கரண்டிலதான் என்றாச்சு

விளக்கிலதான் படிச்சேன் நான்
வெளிச்சம்தான் கொஞ்சமென்றாலும்
விரும்பித்தான் படித்தேனே
வெற்றிதான் பெற்றேனே

மின்வெட்டும் வந்தாச்சு
மின்வெட்டி முடிப்பதற்குள்
மணி ஒன்றும் போயாச்சு
மறுமணியும் வந்தாச்சு
கரண்டும்தான் வந்திட்டும்மா •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. குயிலின் வளைவு இசை

வாழ்வின் நேர்கோடுகளை மட்டும்
நேராக்கத்துடித்து
கணங்களைக் குடித்து
இரகசியக் கீதங்களை
குயில் இசைக்கும் நேரம் தொடங்கியது.

நினைவு கூரும் பொழுதின்
இரவின் கறுப்புக்கள்
வண்ணங்களற்ற பாவனைகளைச் சுழற்றியது
அங்குமிங்குமாய்
வாழ்வின் கருமைகளைத் தீட்டி
இசையறியாக்கவிஞனிடம்
கண்ணீரைத்துடைத்தேன்

அவிழ்க்கத்தெரியாத விழியின்
பார்வைகளைக்காட்டியபடியே
சிறகுகளை வரித்து
ஒவ்வொன்றாய்ப்பாடுகிறது
குயிலின் இனிமை இராகம்

முழு உணர்வையும் இரசித்து
நிறச்சாயங்களைச்சீவி
இசைவெள்ளப்பெருக்கை
வழைத்துப் பாடிக்கொண்டிருந்தேன்
குடித்தபடியே சூழ்ந்திருந்தனர் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. போன் பூவில் எனது மகள்

தனக்கும் விரும்புவதாகக் கூறி
கல்வியைத் தேடிப்பறிக்கிறாள் எனது மகள்
பரபரப்பும் அவசரமும்
காற்றாய் ஓடி வருகையில்
ப்ரியமான புத்தகப் பூக்களைப் பிடித்தபடி
நடந்தும் செல்கிறாள்

ரோசா – அலறி – செவ்வரத்தை
இனங்கண்டும் செல்கிறாள்
எனக்கும் பரிச்சயமான பூக்கள் தான்
விரலின் நுனியில் தொடும்
மென் பூ விதழ் வழியாகவே
எனது மகளும் நடந்து கொண்டிருக்கிறாள்

அவளது தேடலின் நீளத்தை
எனது கைபிடியில் ஒளித்திருக்கிறேன்
பூக்களென பூத்துக் குலுங்கிய போதும்
ஒட்டியிருக்கும் கறுப்புப்புள்ளிகள்
என் மகளிடமும் அப்பிக் கொள்ளும்
என்பதான பயம் எனக்குள்.

அங்குமிங்குமாய் நான் தேடியவைகளை
ஒரேயொரு பட்டுனில் அழுத்தி
பூவுலகின் பூ இதுதான் என
எனக்கும் பறித்துத்தருகிறாள்
வியந்து போய் நான்
புத்தக மரங்களின் கீழ் தான்
பூக்கூடைகளை நிரப்புமாறு
இனிய வேண்டுதலை விடுக்கிறேன் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. பசுமையில்லா வசிய மரங்கள்.

பெருவெள்ளம் வருவதாய்
பச்சையமில்லா மரங்கள் பேசிக் கொண்டன

பச்சையமில்லாக் காடுகள்
பக்குவமில்லா மலைகள்
சமூகக் காடெங்கும் வளர்ந்திருக்கிறது

மழையும் வெப்பத்தையும்
காற்றின் வருகைகள்
ஆழ்ந்த வேருக்குள் பதித்திருக்கிறது
அங்கே
நிறமறியாச் செடிகள்
பொழுது சாயும் நேரம்
எஞ்சிய மஞ்சள் பூக்களை
மடியில் கோர்த்து நிரப்பியபின்
எல்லா மரங்களும் நிமிர்கிறது

மந்திரம் கொட்டப்பட்ட செடிகள்
வரிசையாய் அடுக்கிய கனவிற்குள்
உள் அழைக்கும் கதவுகளால்
புதைந்துள்ளது

சிணுசிணுக்கும் மழையிலும்
வசியமில்லாக் கனவாய்
சிதைந்தும் அழிந்தும் இரவின் கீழ்
வேரோடி நிற்கிறது
செடிகளின் வளர்ப்புகளில்
நிறமற்ற கனவுகள் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. உழைக்கும் உனது கைகள்.

அப்பழுக்கற்ற உனது கைகளை
எங்கேயோ ஒளித்து வைத்திருக்கிறாய்

இறைவனின் இறைமையை மீறி
இரங்கும் தொழிலை தொடர்கிறாய்

பலம் மிக்க உனது கைகளை
பற்றிப் பிடிக்காதிருக்கிறாய்

அஞ்சியும் கெஞ்சியும்
அழுது புலம்பியும்
உனது பைகளை நிரப்புகிறாய்

யானை வீரமாய் உன்கைகள் இருக்க
கோழையாய் வலம் வருகிறாய்

யாசகனாய் வேண்டாம்
யாசிப்பை விட்டு விடு
முன் யோசனையாய் மீள்
கோடீஸ்வரனாகலாம்
கோடி பல பெற்றிடலாம்
உழைக்கும் உன் கைகளை
உயர்த்திக் காட்டு
உலகை மீட்டி எடு •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. மடல்களின் மறைவு

நேற்றைய பொழுதில் - மடல்கள்
இதயம் தொடும் இன்பங்கள்
ஒன்றன் பின் ஒன்றாய்
தேடி வரும் மணியடிப்பில்
எதிரொலியாய் காத்திருப்பு

மடல்களில் உறவுகள் நீண்டன
தபாற்காரனின் மணியடி உயர்ந்தன
உறவுகள் காத்திருப்பில் நிரம்பின

நொடிகள் பல மாய்ந்து விட்டன
காலமும் நேரமும் குறுகிற்று
குறுஞ்செய்தி, குறுமடல், குறுந்தகவல் என
கோபுரமாய் உயர்ந்திற்று

மடல்களுமில்லை மனங்களுமில்லை
மணியடிப்புமில்லை
தபாற்காரனுக்காய் காத்திருப்புமில்லை
வெளிநாடு என்றாலும் கவலையில்லை
போனின் பரவலாக்கமும்
இன்டர்நெற்றின் வலைவீச்சும்
மக்களுக்குள் உள்ளாகி
மடல்கள் ஏங்கும் மனங்களே இல்லை
மடல்கள்
மாய்ந்தும் மறைந்தும் விட்டது
மடல்கள் அற்ற யுகம் பறந்து விட்டது
இனியும்
காலதாமதம் இன்றிய வேகம்
போன்களின் மோகயுகம்
எப்பவோ அறுந்திட்டு மடல்களின் யுகம் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. யுத்தம் வேண்டாம்

எந்தன் ஞாபகங்களை மீட்டுகிறேன்
கடந்தவைகளில் பதிவுகள்
எனக்குள் பாடங்கள் சொல்கிறது
யுகம் தந்த ரணங்கள் கனதியானது
நம் சந்ததிக்கு வேண்டாம்
வேண்டவே வேண்டாம்
நிலவு விழுந்தாலும்
நிம்மதி நமக்குள் முளைக்க வேண்டும்
நமது சந்ததிகள் புதுயுகம் காணவேண்டும்
மனக்கனதிகளோ காயங்களோ
செப்பனிடப் போவதில்லை
வாழ்வின் பாடங்கள்
அன்பையும் அறத்தையும்
அழகூட்ட வேண்டும்
போர்வையாய் முளைக்கும்
போர்ப் பயம் வேண்டாம்
போதும் போதும் - போர்
பித்தமேற்றும்
ஆர்ப்பரிக்கும் போர்
காலங்களின் மீது
திணிக்க வேண்டாம்

எதிர்க்கரையில் எரியும்
எரிநெருப்பின் சுவாலைத்தீ – போர்
ஏறுமுட்டும் நிற்க வேண்டாம்
சந்ததிகளின் கால்கள் மென்மையானவை
பஞ்சுகளில் நடக்கக்கற்றவை
போர் நெருப்பில் பறக்கத் தெரியாதவை
நம் சந்ததிகளை வளர்ப்போம்
யுத்தமற்ற யுகத்துள் வளர்ப்போம்
நித்தம் நமக்குள் மீட்போம் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. மலர்களின் இனிமை

அடர்ந்து நிற்கும்
மரங்களின் கீழ்
காற்றின் அசைவினில்
விழுந்து கிடக்கும் - பூ நான்

மொட்டாயிருந்து
காயங்களை மறைத்து
நேற்றைய கனவுகளைக் குடித்து
மழை வருவதற்கு முன்னெரெல்லாம்
கம்பீரமாய் நிமிர்ந்து
மரத்தில் தொங்கி நின்றேன்

பிஞ்சுப்பூவாயும் மொட்டாயும்
விரியாத போது குந்தி நிற்கும்
அணில்களின் கால்கள்
குத்தாமலும் தாவாமலும்
மறைந்தே போயின

மலராய்ப் பூத்து
இனிமை ததும்பி
வண்ணத்துப்பூச்சிகள் துளைத்து
மகிழ்வைப் பகிர்ந்து
செப்பி நிற்கும் காற்று
உதிர்த்து விழுங்கிற்று
இனிமைகளின் கதவுகளை மூடி •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. வனங்களைக் காப்போம்

சுற்றாடலைக் காப்போம்
சுகமாய் வாழப் பழகுவோம்
நித்தம் நாம் உணர்வோம்
வனங்களைக் காப்போம்

ஒட்சிசனும் - காபனீர்ரொட்சைட்டும்
வனங்களில் நிரம்பியிருக்கும்
நமது குடியிருப்புக்களின் அதிகரிப்பில்
வனங்கள் அழிகிறதே
வாழ்வும் சுருங்குகிறதே

வனங்களின் அவசியம் உணர்வோம்
கன்றுகளை நட்டு வளர்ப்போம்
சந்ததிகளுக்கு இயற்கையைக் கொடுப்போம்
வனங்களை காத்து மீட்போம்.

வனங்கள் இயற்கையின் அழகு
வனங்கள் நாட்டின் அழகு
வனங்கள் வீட்டின் அழகு
வனங்கள் சந்ததியின் அழகு.

வனங்களை வளர்ப்போம்
வனங்களை பாதுகாப்போம்
வனங்களை பெறுமதியாக்குவோம்
வனங்களை சிக்கனப்படுத்துவோம்

வனங்களை செழுமைப்படுத்துவோம்
வனங்களை நேசிப்போம்
வனங்களை இனிமையாக்குவோம்
வனங்களே நமது கண்களாகும் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. இரக்கம்

எனது சின்னமகளின்
விளையாட்டின் நடத்தைகளைப்
பார்க்கும் பொதெல்லாம்
என்கனவுகள் மீண்டும் முளைக்கிறது

விளையாட்டுக் கட்டைகளையும்
அவளுடைய பொம்மைகளையும்
ஒவ்வொரு தருணங்களின் மீதும்
என் உணர்வுகளில் செதுக்கிறேன்

செடியாய் வளர்ந்து நிற்கும் அவள்
மெல்லிய விரல்களால் வளைத்து
வாழ்வின் பசுமைகளைக் காவித் தருகிறாள்
தாமதியாது எனக்குள் முளைக்கும்
பால்யத்துணர்வுகள்
வேறுபட்ட மொழிகளில் உறவாடி
எனதுணர்வுகளைக் கொய்து
பகிர்ந்து கொள்ளும் உறவுகளில் முட்டி
எல்லாவற்றையும் செப்பனிடுகிறது

சேகரம் செய்திருக்கும் பழைய நினைவுகள்
மகளின் விளையாட்டில் புகுந்து
என்னையும் சின்னவளாக்கி
வழியின் கனவுகளைச் செதுக்கி
தாய் - மகளாய் முழுமைப்படுத்துகிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. பள்ளியின் சந்திப்பு

என் மகளைப்பாடசாலைக்கு
விடுவதற்காகச் செல்கிறேன்
என்னை நிரப்பியிருக்கும்
பள்ளியும் படிப்பும் பற்றிய
கனவுகளின் கதவுகள்
பகிர்ந்து கொள்ளும் அவாவிதலாய்
மனசில் விட்டும் எழுந்து
காற்றைக் கிழித்தும் பறக்கிறது

எனது வருகை பற்றியெல்லம்
அறியாத நினைவுகளெல்லாம்
பெருக்கெடுத்து ஓடுகிறது
பள்ளியின் பசுமை நினைவுகள்
பல தசாப்தங்களைக் கடந்தும்
குருத்து மணலின் கால்களையும்
நீண்டு நின்ற மாமரத்தின் கிளைகளையும்
எனக்குள் மீளவும்
முளைப்பித்தும் புதுப்பித்தும்
சிறுபராய நினைவுகளைப் பெருக்கிறது.

சந்திப்புக்களின் சந்தோசங்களை
சிறிய மகளின் அழைப்புகள்
சிறிய மகளின் மொழிகளோடு
செதுக்கியும் பிரவகித்தும் கனக்கிறது

பள்ளியின் தரிசிப்பு மொழியில்
பால்ய நட்பின் உறவுகளும்
பகல் பொழுதெனப் புலர்ந்து
புது உறவையும் பாடுகிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. மழை

மழைக்காலம் என்றதும்
வீட்டின் கதவுகளைப்பூட்டி
உறவுகளிடம் பேசும் தருணம் உதிக்கிறது

வெளியில் செல்லமுடியாத அவாவுதல்
குளிர்மிகு தருணத்தை உணர்த்தி
காற்றில் பறந்து வரும் பகிர்வுகள்
மென்மையாய்ப்பேசி உலாவுகிறது

எதற்கும் பரிச்சயமாகிப் போகும்
இயற்கையின் தரிசிப்பில்
இரவையும் மூடி மறைத்து
இழுத்துச்செல்கிறது மழை

காலையும் மாலையுமற்று
மழையின் இதமும் ரிதமும்
மகிழ்ச்சியையும் மனதையும்
மறுபடி மறுபடி மழையின்
ஈரங்களைத் துவட்டுகிறது

மழையின் களிப்பு
வறட்சியின் வெடிப்பைக் கிழித்து
வளமாகியும் வரமாகியும்
வழிமுழுக்கவும் பெருக்குகிறது

மழையின் மகிழ்ச்சியில் ததும்பி
இலைகளும் மரங்களும் நிமிர்ந்து
உயிர்களின் தாகங்களை நனைத்து
ஆறாய்ப் பெருக்கி வழிகிறது •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. பிரார்த்தனைக்காலம்

கடந்த காலங்களின்
பதிவுகள் முளைத்தெழுந்தன
மனசின் பயம் தொக்கிய
நகர்வுகள் வழிந்தோடின
தொலைந்து போன மனிதம்
தொடர்வதாய் உணர்ந்தோம்
பேசவும் பகிரவும் முடியாமல்
உணர்வுகளை உணர்ந்தோம்

வன்மைகளை, பாவங்களை
அநியாயங்களை ஒழிப்போம்
நமது சமுகத்தை மீட்போம்
தார்மீகத்தை வளர்ப்போம்

சுவனத்தின் கதவுகள் திறக்கும்காலம்
புனித ரம்ழானை அடைந்து விட்டோம்
நமது காதுகளின் மீது
இனிய பிரார்த்தனைகளே கேட்கிறது

கண்கள் குளிரவும்
உறவுகள் சமுகங்கள் நிமிரவும்
இருகரமேந்தி பிரார்த்திக்கவும்
உன்மனதை மனிதனாக்குவாய்
உள்ளொளி ஒளிரவும்
உலகம் உருளும் போதெல்லாம்
உண்மைகள் உயரவும் மீள்வாய்
நமது சிந்தனைகள் செழுமையடையும்
போதெல்லாம்
நமது பிரார்த்தனைகள்
மீளவும் மீளவும் உயிர் பெறும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48. வாசிப்பு

என்னருமை செல்வங்களே
எப்போதும் வாசியுங்கள்
உங்கள் நேரங்களை ஒதுக்குங்கள்
வாசிப்பில் யாசிப்பில்லை
வாசிப்பில் கஞ்சத்தனமில்லை
வாசிப்பின் கைபிடியில்
உலகத்தின் விடயங்களை
மொழியின் ஆழங்களை உணர்வீர்கள்

வாசிப்புத் தரும் அறிவு
உங்களை உயிரூட்டும்
முழுமை மனிதனாய் மீள்வீர்கள்
வாசிப்பை முடக்கிய காலம் இது
வாசங்கள் அற்று நகர்கிறது
வாசிப்பின் மீள்தல் உங்களிடமாகட்டும்
உங்களை நீங்கள் உணர்வீர்கள்
அறிவுசார் நூல்களை தேடுங்கள்
தேனாய் ஊறும் அறிவுக்கு
தெவிட்டா மீள்தல் வாசிப்பு

கருத்தூன்றி வாசித்து
கவனமாய்க் கற்றிடுங்கள்
காலம் தரும் பயனைப் பெற்றிடுங்கள்
களிவும் நிறைவுமாய் அடைவீர்கள் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூக்கள் கொட்டிய பாதையில் எந்தப் பூவும் மிதிபடாது நடக்கத் தெரிந்த கலை அறிந்தவள் பெண். அப்படியொரு ரசனை அவளுள்.

வாழ்வை வர்ணம் தீட்டத் தெரிந்த கவிதைப் பெண் சித்தி றபீக்கா பாயிஸ் உள்ளோடும் அலைகளில் பல பாத்திரங்களைக் கவிதைக்குள் கொணர்ந்துள்ளார். வாழ்வையும் அதன் சாரலையும் பேசாது எதுவும் நீண்டு தொடரும் படைப்பிலக்கியமாகாது.

றபீக்காவும் பாடியுள்ளார் தன்னை, குழந்தைகளை, டீக்கடைப்பையனாக, வீட்டு வேலை செய்யும் சிறு பெண்ணை, கூலித் தொழில் செய்பவனை, குடிகார அப்பாவை, குழந்தைமையைக் காணாமலாக்கும் ரியூசன் வகுப்புக்களை, இலைக்கறி விற்கும் சிறுமியை, போனில் மட்டும் தாய்மையைக் கொண்டாடும் வெளிநாட்டிற்கு வேலைக்குப் போன அம்மாவை, பிச்சைக்காரனை, பச்சையமற்ற மனிதர்களை, பழைமையை, முக்கியமாக இலைகளை.

சிறிதும், பெரிதுமாய் - கவி எழுத்து - மனசஞ்சலங்களை வாழ்வு பற்றியதான இனிமையும் அதன் ஐயங்களும் சில கவிதைகளில் அழகியலுடன் வந்தமர்கின்றது. பிரச்சாரம் சாயலும் - ஒரு சில கவிதைகளில் மேடை போடுகின்றது.

நகரும் பொழுதுகளில் வேரூன்றி, கிளை விட்டு, காய்க்கத் தொடங்கியுள்ளதன் அடையாளம் இக் கவிதைகளில் தெரிகிறது.

பெண் வெளிப்படுத்தும் கவிதைகளின் மகத்துவம் அனுபவபூர்வமானது. சிறுமை கண்டு பொங்கவும். அழகில் லயிக்கவும் முடியுமானது.

கனிந்து பழம் தரவும், இயற்கையும் வாழ்வையும் அதன் இங்கிதங்களையும் உயிர்ப்பாய்ப் பாடவும் தனித்துத் தெரியும் கவிப்பெண்ணாய் படைப்புலகில் வலம் வரவும்... எனது அன்பும் வாழ்த்துக்களும்....

- மலரா -

ISBN 978-955-4628-69-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org